# இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

## International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:3 இதழ்:12 பிப்ரவரி 2018

Vol. 3 Issue : 12 February 2018





க.பாலாஜி
வி.வசந்தா
சே.முனியசாமி
இரா.சி.சுந்தரமயில்
தி.நிரஞ்சினி
யே.டிலானி
நா.பிரபு
கி.சங்கர நாராயணன்
சு.பேச்சியம்மாள்
மா.யோகராஜ்
த.சத்தியராஜ்
ச.முத்துச்செல்வம்
அ.கோவிந்தராஜன்
ப.மணிகண்டன்
இரா.வைதேகி
மா.விஜயலெட்சுமி
சீ.யுவராஜ்
கா.ராஜகணபதி
மு.முனீஸ்மூர்த்தி
இரா.விஜயராணி
R.NITHYA

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

*முனைவர் த.சத்தியராஜ்*
கோயமுத்தூர்
*09600370671*
*inameditor@gmail.com*
*www.inamtamil.com*

பிப்ரவரி 2018 மலர் : 3 இதழ் : 12
February 2018 Volume III Issue 12

## உள்ளே ...

**செவ்விலக்கியப் பிரதிகளில் பரத்தமை - சமூகவியல் நோக்கில் மீள்வாசிப்பு [தொல்காப்பியம், நற்றிணை, குறுந்தொகைப் பனுவல்களை முன்வைத்து]**
முனைவர் க.பாலாஜி | 4

**நுண்கடன் திட்டங்களினால் ஏற்படும் விளைவுகள்**
வி.வசந்தா | 18

**வெண்ணீர்வாய்க்கால் இரா.பாண்டிப்புலவர் வாழ்வும் வரலாறும்**
சே.முனியசாமி | 26

**நாட்டுப்புறப் பாடல்களின் வளர்ச்சிப் படிநிலைகள்**
முனைவர் இரா.சி. சுந்தரமயில் | 35

**சசூரின் மொழியியல் ரீதியான அமைப்பியலும் பின்அமைப்பியலும்**
திரவியராசா நிரஞ்சினி | 43

**வகுப்பறைக் கற்றலில் பவ்லோவின் கற்றல் கோட்பாடு**
யேசுஜயா டிலானி | 52

**தமிழில் வட்டார வழக்குச் சொல்லகராதிகள் உருவாக்கம்**
முனைவர் நா.பிரபு | 61

**தமிழ்க் காப்பு இயத்தின புதிய வினைக் கோட்பாடு - உருவாக்கமும் கட்டமைப்பும்**
முனைவர் கி.சங்கர நாராயணன் | 65

**நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் இராஜபதி மாரியம்மன் கொடை விழா – அறிமுக நோக்கு**
முனைவர் சு.பேச்சியம்மாள் | 75

**இலங்கையில் தொலைக்காட்சி விளம்பரங்களால் வணிக நடவடிக்கைகளில் ஏற்படும் ஒழுக்க மீறுகைகள்**
திரவியராசா நிரஞ்சினி & மா.யோகராஜ் | 80

**வஜ்ஜாலக்கத்தில் வள்ளுவரின் ஆள்வினைச் சிந்தனை**
முனைவர் த.சத்தியராஜ் | 85

**ஓச்சாவும் ஓத்தக்காது ஆடும் (நூலறிமுகம்)**
முனைவர் ச.முத்துச்செல்வம் | 90

**ஐங்குறுநூறு - மருதத்திணைப் பாடல்கள் வெளிப்படுத்தும் தலைவன தலைவியின் உளநிலை**
முனைவர் அ.கோவிந்தராஜன் | 94

**அகநானூறு சுட்டும் மருதநிலச் சிறப்பு**
ப.மணிகண்டன் | 98

**பதிற்றுப்பத்தில் உழவும் உழவரும்**
இரா.வைதேகி | 102

**மலைபடுகடாம் சுட்டும் நன்னன்சேய் நன்னனின் நாட்டுவளம்**
மா.விஜயலெட்சுமி | 105

...

## இவ்விதழுக்குக் கருத்துரை வழங்கிய மதிப்பீட்டறிஞர்கள்

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் ம.தமிழரசன் (கோவை)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் முகம்மது ரஃபீக் கான் (கோவை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)


**சங்ககால மக்களின் வாழ்வியலில் மனிதம்**

சி.யுவராஜ் | 109

**குறுந்தொகைத் திறனுரைகள் - நூல் மதிப்பீடு**

கா.ராஜகணபதி | 114

**ஆய்வாளர் அணுக வேண்டிய கருவி நூல்கள்**

மு.முனீஸ் மூர்த்தி | 121

**மலைபடுகடாம் சுட்டும் விருந்தோம்பல்**

முனைவர் இரா.விஜயராணி | 126

**Perspectives from second Language acquisition**

R.Nithya | 131


•••

மதிப்பிடப்பெற்றது

# சங்ககால மக்களின் வாழ்வியலில் மனிதம்

சி.யுவராஜ்
முனைவர் பட்ட ஆய்வாளர்
பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி -24.

மனிதம் மண்ணுலத்தில் இருப்பதால் இன்னும் உலகம் எழிலாகவும் வளமாகவும் இருக்கிறது. மனித செயல்பாடுகளில் ஒரு மனிதன் மற்றொரு மனிதன் மேல் காட்டும் அன்பு தான் மனிதம் எனலாம். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்று வள்ளுவர் மிகச் சரியாகக் கணிக்கிறார். சங்ககால இலக்கியமான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் வெளிப்படுத்தும் மனிதப்பண்புகளை இனங்கண்டு வெளிப்படுத்துகின்றது இக்கட்டுரை.

### மனிதம் - சொல் விளக்கம்

"மனம் என்ற சொல்லின் அடியிலிருந்தே மனிதம் என்ற சொல்லும் தோன்றியிருக்க வேண்டும். மனத்தை உடையவன் மனிதன் என்றிருந்தது பின்பு மனிதம் என்றாகியிருக்கலாம். அதுவே முதல் நீண்டு மானிடம் என்று ஆகியிருத்தல் வேண்டும்" என்று கரு.நாகராசன் 'தமிழர் கண்ட மனம்' நூலில் கூறியதை சி. இராசவேந்திரன் வழிமொழிகிறார். மனிதன் என்ற சொல் மனிதம் ஆக மாறிய மனிதநேயத்தைக் குறிக்கிறது என்பார். (சி.இராசவேந்திரன், பெரியபுராணத்தில் மனிதநேயச் சிந்தனை, ப.58)

### சங்ககாலப் பெண்கள்

மனமொத்த தலைவனும் தலைவியும் கருத்தொருமித்த ஆதரவான இனிமையைப் பழந்தமிழர்கள் ஊக்குவித்தனர். தலைவிக்குத் துணையாக நின்ற தோழியானவள் அவளுடைய காதலுக்குத் தூதாக மட்டுமின்றி விரைவில் காதலரின் திருமணத்தை நடத்தச் செவிலியிடமோ தாய் தந்தையரிடமோ எடுத்துரைக்கும் காட்சிகளைச் சங்க இலக்கியம் பதிவு செய்திருக்கிறது. உடன்போக்குச் செயலை எதிர்க்காமல் வாழ்த்திய நெஞ்சங்களைக் காட்டும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது சங்க இலக்கியம்.

தலைவனே துணையென்று தலைவி வீட்டைத் துறந்து செல்கிறாள். தலைவியைத் தேடி வருகிறாள் செவிலித்தாய். அந்தணரிடம் என் மகள் ஆடவன் ஒருவருடன் சென்றதைக் கண்டீர்களா எனக் கேட்பதை,

"என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ பெரும" (கலி.9:6-8)

என்கிறாள் செவிலி. அவ்வாறு கேட்கும் செவிலிக்கு அந்தணர் விடை சொல்கிறார். இதனை,

"ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே எனவாங்கு
இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற்று அதுவே" (கலி.11:18-23)

பல்வேறு நறுஞ்சாந்தமும் அதைப் பயன்படுத்துவோர்க்கே பயன்தரும். யாழில் பிறக்கும் இசையும் இசையைக் கேட்பவர்க்கே பயன்தரும். அதுபோல நும்மகள் சிறந்ததோர் காதலனைத் தேடிச் சென்றனள். அவர்க்கே அவள் உரிமை. எனவே அமைதிகொள் என்கிறார் அவ்ஆன்றோர்.

**கைம்பெண் காண்துயர்**

புறநானூறு காட்டும் கைம்பெண் வாழ்க்கைநிலை கண்ணீர் வரவழைக்கும் துன்பநிலைக் காட்சியாக விரிகிறது. மன்னன் பூதப்பாண்டியன் மாண்டுவிட்டான். அவனுடனே தானும் தீப்பாய்ந்து உயிரைப் போக்கிக் கொள்ளத் துணியும் அவன் மனைவி பெருங்கோப்பெண்டை அவ்வூர் ஆன்றோர் தடுத்து நிறுத்தினர். கைம்பெண் படுதுயரங்களைச் சொல்லி, அவர் உயிர்வாழ்தலினும் இறத்தல் நன்றே என்கிறார் ஒரு புலவர். இதனை,

“அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
வெள்ளெள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சியாகப்
பரற்பெய் பள்ளிப் பாய் இன்று வதியும்
...
நளிஇரும் பொய்கையும் தீயும் ஓரற்றே” (புறம்.246:4-15)

கைபிழிந்த நீர்ச்சோற்றை, வெள்ளை எள் அரைத்துப் புளிச்சாறு கலந்த வேளைக் கீரையுடன் உண்டு, பருக்கைக் கற்களின்மேல் பாய் விரிக்காமல் படுத்துறங்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் பெண்ணைக் கொல்லாமல் கொல்வன அன்றே! கைம்பெண்கள் “பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்’ (புறம்.62) என்றும் அறிகிறோம். கணவனை இழந்த பெண்டிரின் உணர்வையெலாம் கொன்று சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட நிலையைக் காண்கிறோம்.

உயவற் பெண்டிர் (புறம்.246), ஆணில் பெண்டிர் (புறம்.353), பருத்திப் பெண்டிர் (353), கழிகல் மகடூஉ (புறம்.261) என்றெல்லாம் கணவனையிழந்தோர் பெயர்கள் புலவர்களால் குறிப்பிடப்பெற்றுள்ளன. கொய்மழித் தலையும் பல்லணி யிழந்த தோற்றமும் பெண்மைக்கு அந்நாளில் சமூகம் தந்த நிலை.

கணவன் இறந்த பின்கு வாழ்ந்து துயர் அடைவதைக் காட்டிலும் அவனுடன் மாய்வதையே தலைக்கற்பாக நினைத்தனர். அந்நாள் மணிமேகலைக் காப்பியம் கூறுவதை,

“காதலர் இறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது
இன்னுயிர் ஈவர் ஈயார் ஆயின்
நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயின் அன்பரொடு
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுஉடம்பு அடுவர்”

(மணி. ஊரலர் உரைத்த காதை, 42-47)

என உரைக்கிறது. போரில் கணவன் உயிர் நீத்தான் எனின், அவனைக் கொன்ற வேலினால் தன்னையும் மாய்த்துக்கொள்வாள் பெண் என்பதை,

“நீத்த கணவன் நீர்த்த வேலின்
பேஎத்த மனைவி ஆஞ்சி யானும்” (தொல்.புறத்.19:12-13)

எனத் தொல்காப்பியம் குறிக்கிறது.

**விருந்தோம்பல்**

தமிழர்களின் உயர்பண்புகளில் ஒன்று விருந்தோம்பல் ஆகும். விருந்தினர் புறத்திருக்கச் சாவாமருந்தே கிடைத்தாலும் தனியாக உண்ணாத தன்மைக்குரியோர் தமிழர்கள் என்பதை,

"உண்டால் அம்ம இவ்வுலகம் - இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே" (புறம்.182:1-3)

எனும் புறநானூற்றுப் பாடலடிகள் சுட்டுவதன்வழி அறியலாம். சிறுகுடிகிழான் பண்ணனைப் பாராட்டிச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பாடியதை,

"பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வன்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்ஒழுக்கு ஏய்ப்ப
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்" (புறம்.173:5-8)

எனும் புறநானூற்றுப் பாடலடிகள்வழி அறியலாம். அப்பசிப்பிணி மருத்துவனாம் பண்ணனை, 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' எனப் புலவர் பாடுகிறார்.

விருந்தினரைப் பேணாத வாழ்க்கை செம்மை இல்லாத வாழ்க்கை "விருந்துண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை" எனப் பெருங்குன்றூர்க் கிழார் பாடலடியின் வழியாகக் கூறுகிறார்.

சங்ககாலக் குலமகளிர், தன்னிடம் உள்ள உணவு மிகக்குறைவாக இருப்பினும், விருந்தினர் பலராய் வரக்கண்டும் துன்பமின்றியும் அனைவரையும் முறையாக வரவேற்றுப் பகிர்ந்து விருந்தோம்புவர் என்பதை,

"தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்
நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்
இற்பொலி மகடூஉப் போல" (புறம்.331:7-9)

என உறையூர் முதுகூத்தனார் கூறுவதைக் காணமுடிகிறது. இரவில் நேரங்கழித்து விருந்தினர் வந்தாலும் மனம் கோணாமல் ஏற்று விருந்தோம்பும் பெண்டிரை

"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியள் குறுமகள்..." (நற்.142:9-11)

என நற்றிணைப்பாடல் வெளிப்படுத்துகின்றது. விருந்தினர் வருகையால் தலைவன் தலைவிக்கு இடையே எழும் ஊடல் உருமாறுகிறது. இல்லறக் கடமையாய் விழுமியமாய் விருந்தோம்பல் இருந்ததை,

"எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாளன்று
சிறுமுள் ளெயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே" (நற்.120:10-12)

என்று நற்றிணைப் பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

தலைவி வாடைக்காலத்தில் கொழுநன் வருவான் எனக் காத்திருக்கிறாள். வாடைக்காலம் எப்போது வரும் என்பதை எவரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ள நினைக்கிறாள். அப்போது துறவி ஒருவர் வருகிறார். அவர் மனம் குளிருமாறு பேசி வாடை வருவது எப்போது எனக் கேட்பதை,

"ஆசுஇல் தெருவில் நாய்இல் வியன்கடை

செந்நெல் அமலை வெண்மை வெள்ளிழுது
ஓர்இல் பிச்சை ஆர மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறீஇயரோ நீயே
மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை
எக்கால் வருவது என்றி
அக்கால் வருவர்எம் காத லோரே" (குறுந்.277)

எனும் குறுந்தொகைப் பாடல் சுட்டுகின்றது. "நாய் இல்லாத வீட்டில் செந்நெல் அரிசிச்சோறும் வெண்மையான நெய்யும் தங்களுக்குக் கிடைக்கட்டும். வயிறு நிறைய உண்டபின் வெந்நீரைத் தங்கள் கமண்டலத்தில் பெறுவீராக" என அத்துறவியின் பசிதீர்க்கும் வழியையும் புலப்படுத்துகிறார் ஓரிற்பிச்சையார்.

**இரக்கவுணர்வு**

பேகன் என்னும் மன்னன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து வாழ்கிறான். பரிசில் வேண்டிப் பாடி வந்த புலவர்களான கபிலர், அரிசில்கிழார் ஆகியோர் கண்ணகிக்காக இரக்கப்பட்டு மன்னா 'யாம் விரும்பும் பரிசில் நீவிர் இருவரும் சேர்ந்து வாழ்வதே ஆகும்' எனச் கூறுகின்றனர்.

"...இன்னாது
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைப்ப விம்மி
குழல்இனை வதுபோல் அழுதனள் பெரிதே" (புறம்.143:12-15)

எனக் கபிலர் வேதனைப்படுகிறார். மேலும்,

"...காந்தள்
முகைபுரை விரலின் கண்ணீர் துடையா
யாம்அவன் கிளைஞரேம் அல்லேம் கேள்இனி
எம்போல் ஒருத்தி நலன்நயந்து என்றும்
வரூஉம் என்ப" (புறம்.144:8-12)

என்று பேகனின் மனைவி கூறுவதைப் பேகனிடம் உரைக்கிறார் பரணர்.

முரசுகட்டிலில் தூக்கம் போட்ட முதல் மனிதன் எனப் புதுக்கவிதைக்காரர்களால் நகைமுரண்படச் சொல்லப்படும் புலவர் மோசிகீரனார். சேரல் இரும்பொறையை நாடி வந்தபோது களைப்பால் முரசுகட்டிலில் தூங்கிவிடுகிறார். அங்கு வந்த அரசன் இதைக் கண்டு சினமாகாமல், அரசு நியதிப்படி வாளால் வெட்டாமல் இருந்ததோடு, புலவர் தூங்க ஏதுவாகக் கவரி வீசிய கனிவுறு காட்சியைப் புறநானூறு ஒரு குறும்படமாகப் பதிவு செய்கிறது.

"நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்கும் நின்வாள் வாய்ஒழித்ததை
அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதுஅறிதல்
அதனொடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசி யோயே..." (புறம்.50:7-13)

என மோசிகீரனார் இரும்பொறையின் கனிந்த உள்ளத்தை வியந்து பாடுகிறார்.

### கொடை

வறுமையில் வாடிய புலவர்கள் மன்னர்களிடம் திரும்பத்திரும்பச் சென்றாலும் மனங்கோணாது பரிசில் நல்கிய கொடையுள்ளம் படைத்தவர்களைப் புறநானூறு இனம் காட்டியிருக்கிறது. பிட்டங்கொற்றனின் கொடையுள்ளத்தைக் காரிக்கண்ணனார்,

"இன்று செலினும் தருமே சிறுவரை
நின்று செயினும் தருமே பின்னும்
முன்னே தந்தனென் என்னாது துன்னி
வைகலும் செலினும் பொய்யலன் ஆகி
யாம்வேண்டி யாங்குஎம் வறுங்கலம் நிறைப்போன்" (புறம்.171:1-5)

என வியந்து பாடுகிறார். அதியமானின் கொடையுள்ளத்தை ஔவையார் பாடும்போது பலநாட்கள் தொடர்ந்து பரிசில் வேண்டிச் சென்றாலும், பலர் புடைசூழச் சென்றாலும் முதல்நான் கண்டது போலவே மகிழ்ந்து மனம்கோணாது பரிசில் தருவான் எனப் பாராட்டுவதை,

"ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ" (புறம்.101:1-3)

எனப் பாடிப் பரவுகிறார் ஔவையார்.

### தொகுப்புரை

சங்க கால மக்கள் காதலிலும் (அகம்) வீரத்திலும் (புறம்) சிறந்து விளங்கியுள்ளமைக்குச் சான்று பகர்வனவே சங்க இலக்கியங்கள். அவ்விலக்கியங்கள் தம் சமகாலத்தில் வாழ்ந்த மக்களது மனிதநேயப் பண்புகளைச் சமகால மக்களுக்கு நடப்பியலை எடுத்துரைக்கும் நோக்கிலும் அடுத்தடுத்த தலைமுறை மக்களுக்கு அறிவுறுத்தும் நோக்கிலும் விதந்து பேசியுள்ளன எனலாம். இலக்கியங்கள் மனிதன் மேற்கொள்ள வேண்டிய இலக்கினை எடுத்தியம்பும் தன்மையன. இவ்வெடுத்தியம்பும் தன்மையைச் சங்க இலக்கியங்கள் செவ்வனே செய்துள்ளன எனலாம்.

### பார்வை நூல்கள்


- கௌமாரீஸ்வரி, எஸ்.(பதி.), 2009, தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
- சாமி சிதம்பரனார், 2014, குறுந்தொகைப் பெருஞ்செல்வம், பூம்புகார்ப் பதிப்பகம், சென்னை.
- சோமசுந்தரனார், பொ.வே., 1972, பத்துப்பாட்டு பகுதி (1), திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- தண்டபாணி, துரை.(உ.ஆ.), 2010(மு.ப.), மணிமேகலை தெளிவுரை, உமா பதிப்பகம், சென்னை.
- தமிழமுதன் மு.(உ.ஆ.), 2012(மு.ப.), கலித்தொகை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை,
- துரைசாமிப்பிள்ளை ஔவை சு., 2010(மு.ப.), புறநானூறு மூலமும் உரையும் தொகுதி (2), பூம்புகார்ப் பதிப்பகம், சென்னை.
- நாராயணசாமி ஐயர் பின்னத்தூர், (உ.ஆ.), 1952(மு.ப.), நற்றிணை மூலமும் உரையும், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.